# களவியல்

களவு என்பது பிறர்பொருளைத் திருடுவது; பிறர் பார்வையில் படாதவாறு மறைவாகச் செய்வது. அவ்வாறே திருமணத்திற்குமுன் காதல் ஒழுக்கத்தில் ஈடுபடும் காதலர்களும் தம் உணர்வுகளை - செயல்களைப் பிறருக்குத் தெரியாமல் மறைக்க முயலுவர். காதலின் தொடக்கநிலையில் காதலன் தன் உயிர்த்தோழனிடமும், காதலி தன் உயிர்த்தோழியிடமும் கூட தம் காதலை வெளிப்படுத்தத் தயங்குவர். எனவேதான் திருமணத்திற்கு முந்திய காதல் ஒழுக்கம் களவு எனப்படுகிறது.

எனினும் பிறர் பொருளைத் திருடும் களவு போன்றது அன்று காதலர்கள் மேற்கொள்ளும் களவு. பிறர் பொருளைத் திருடும் களவு பஞ்சமாபாதங்களுள் ஒன்று. காதலர்களின் களவோ திருமணத்தில் முடிந்து மக்கட்பேற்றினைத் தந்து மனிதப் பரம்பரை மாநிலத்தில் தொடர்ந்து வர வழிவகுப்பது. எனவே இக்களவு படைத்தவன் வகுத்த சாதகங்களுள் ஒன்று. கன்னியரை அவர்கள் உறவினர் கொடுப்பக் கொள்ளாமல் காதலர்கள் மறைவாக அக்கன்னியருடன் இணைவது. எனினும் நெறிமுறை பிறழாமல் வாழ்வதால் இது அறமே என்பார் இளம்பூரணர்.

மறைவாக இல்லாததும் வெளிப்படையானதுமான வேதத்தை 'மறைநூல்' என்கின்றனர். அவ்வாறே பிறர்பொருளைக் களவாடாத காதல் ஒழுக்கத்தையும் களவு என்கின்றனர் என்பர் நச்சினார்க்கினியர்.

களவொழுக்கம் குறித்த இலக்கணங்களைப் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயலாகிய களவியல் எடுத்துரைக்கிறது.

களவியலில் களவின் இயல்பு, காதலின் தொடக்க நிகழ்வுகள், மெய்யுறு புணர்ச்சிக்குத் தலைவன் தலைவியரைத் தூண்டும் அவத்தைகள் களவொழுக்கத்தில் தலைவன் தலைவி தோழி செயல்களும் கூற்று நிகழ்த்துமிடங்களும், செவிலி கூற்று நிகழ்த்துமிடங்கள் ஆகியனவும் களவெவாழுக்கம் குறித்த பிறசெய்திகளும் விளக்கி உரைக்கப்படுகின்றன.

## I. களவின் இயல்பு

ஓர் ஆணும் பெண்ணும் எதிர்பாராதவிதமாகச் சந்திப்பதற்கும், களவொழுக்கத்தில் ஈடுபடுவதற்கும் அவர்களின் முன்வினைப் பயனாகிய ஊழ்வினையே காரணம். இத்தகைய களவொழுக்கம் அந்தணர் நூல்களில் சொல்லப்படும் எட்டு வகையான திருமணங்களுள் ஒன்றாகிய கந்தருவ மணத்திற்கு நிகரானதாகும்.

வானவர்களாகிய காந்தருவர்கள் இசைத் திறமை அமையப் பெற்றவர்கள்; நல்ல யாழை ஏந்தியவர்கள். இத்தகைய காந்தருவ குலத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனும் இளம் பெண்ணும் தற்செயலாகச் சந்தித்து என்றும் பிரியாத

Scanned by TapScanner

இணையாக விளங்குவதே காந்தருவ மணம் ஆகும். களவொழுக்கம் இத்தகைய காந்தருவ மணத்திற்கு நிகரானது என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

*மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்*
*துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே* (நூற்பா 1038)

என்பது இதுபற்றிய தொல்காப்பிய நூற்பா வரிகளாகும்.

எனினும் காந்தருவ மணத்திற்கும் களவொழுக்கத்திற்குமிடையே சில வேறுபாடுகளும் உள. களவொழுக்கத்தில் முதலில் நிகழ்வது உள்ளப் புணர்ச்சி. அதன்பிறகே உடற்புணர்ச்சி. ஆனால் காந்தருவ மணத்தில் முதலில் உடற்புணர்ச்சி; அதன் பிறகே உள்ளப்புணர்ச்சி நிகழலாம்; நிகழாமலும் இருக்கலாம்; இன்னொரு இணையை நாடலாம். ஆனால் களவொழுக்கம் கற்பெனும் திருமணத்தில் முடியும்; நிலையான உறவு மலரும்.

## II. காட்சி, ஐயம், தெளிதல், கண்கள் காதல் உணர்த்தல் (காதலின் தொடக்க நிகழ்வுகள்)

அகப்பொருள் இலக்கியங்களில் பேசப்படும் காதல் ஒழுக்கமாகிய களவொழுக்கத்தின் தொடக்க நிகழ்வுகள் குறித்துத் தொல்காப்பியர் களவியலின் தொடக்கத்தில் எடுத்துரைக்கிறார். அவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

**காட்சி:** ஓர் ஆணையும் பெண்ணையும் காதலால் ஒன்று சேர்த்து வைப்பது அவர்களின் நல்லூழ் ஆகும். பிரித்து வைப்பது தீயூழ். இவற்றுள் உயர்ந்த பாலாகிய அதாவது சிறந்த ஊழாகிய நல்லூழின் காரணமாக ஒத்த நிலையில் உள்ள ஒரு தலைவனும் தலைவியும் சந்திக்கும்போது ஒருவரை ஒருவர் நோக்குவர். இது காட்சி எனப்படும். தலைவன் தலைவியைவிட உயர்ந்த நிலையில் அதாவது சிறந்த பண்புகளை உடைணவனாக இருந்தாலும் குற்றமில்லை.

*ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
*ஒன்றி உயர்ந்த பால தாணையின்*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப*
*மிக்கோ னாயினும் கடிவரை இன்றே* (நூற்பா 1039)

என்பது இத்தகைய காட்சி என்பது பற்றிக்கூறும் தொல்காப்பிய நூற்பா ஆகும்.

இந்நூற்பாவிற்கு டாக்டர் இலக்குவனார் கூறியுள்ள விளக்கம், மேற்குறிப்பிட்ட விளக்கத்தைவிட இன்னும் பொருத்தமானதாக அமைந்துள்ளது:

"ஒன்றாக இல்லாத, வேறுபட்ட பாலினராக உள்ள ஆண் பெண்

ஆகியோருள், ஒத்த நிலையில் உள்ள தலைவனும் தலைவியும் தற்செயலாகச் சந்திக்கும்போது சிறந்த பாலுணர்வின் காரணமாக ஒருவரை ஒருவர் நோக்குவர்'' என்பதே இலக்குவனார் தரும் விளக்கமாகும்.[1]

(எ-டு) கம்பராமாயணத்தில் வரும் "அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்" என்னும் புகழ்பெற்ற பாடல் வரி.

தலைவன் தலைவி ஆகிய இருவருள் யார் முதலில் நோக்கியவர் என்ற வினாவுக்கே இடமளிக்காதபடி இருவரும்ஒரே நேரத்தில் நோக்குவர். "கிழவன் கிழத்தியைக் காண்பான் என்றோ, கிழத்தி கிழவனைக் காண்பாள் என்றோ எழுவாயும் செயப்படுபொருளுமாகத் தொல்காப்பியம் நடைதொடுக்கவில்லை. முந்திக் காதலித்தவர் யார் என்ற வினாவுக்கு இடம் வையாமல் இருவர் பார்வையும் ஒரே நேரத்தில் விழுந்தது என்னும் காதலியல்புப் புலப்பட 'கிழவனும் கிழத்தியும் காண்ப' என இருவரையுமே எழுவாயாக வைத்துக்காட்டும் நடைப்பாடு அறியத்தகும்"[2] என டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் கூறியிருப்பது இக்கருத்தை வலியுறுத்தும்.

**ஐயம்**: தலைவி அழகு முதலிய பண்புகளில் பெரிதும் சிறந்திருந்தாலும், தலைவியைத்தான் கண்ட இடம் கற்பனை உலகம் போன்ற சிறப்புடையதாக இருந்தாலும், தலைவனுக்குத் தலைவி தலைவி வானுலகப் பெண்ணோ, மானுடப் பெண்ணோ என்ற ஐயம் தோன்றும். மேற்கூறியவாறு சிறந்த நிலை இல்லாமல் இழிந்த நிலை இருந்தால் இத்தகைய ஐயம் தலைவனுக்குத் தோன்றாது. மாறாகத் தலைவி எத்தன்மையினள் என்பதை அந்நிலை அவனுக்குச் சுட்டிக் காட்டிவிடும்.

*சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப*
*இழிந்துழி இழிபே சுட்டலான* (நூற்பா 1040)

என்னும் நூற்பாவால் இதை அறியலாம்.

(எ-டு) அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என நெஞ்சு - குறள்

'புதிய மலரே யாரோ யாரோ இளமை மின்னிடும் தேவதை' - கண்ணதாசன் பாடல்.

மேற்குறிப்பிட்ட ஐயம் தலைவனிடமே தோன்றும் தலைவியிடம் தோன்றாது; தோன்றினால் தலைவிக்கு தலைவனிடம் அச்சம் தோன்றுமே யன்றிக் காதல் தோன்றாது.

---

1 டாக்டர் இலக்குவனார், தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.159.

2 டாக்டர் வ. சுப. மாணிக்கம்,தமிழ்க்காதல, ப.43, மேற்கோள்: தொல்–பொருள்–இளம்பூரணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பாடநூல், தொலைதூரக் கல்வி இயக்ககம், ப.79

Scanned by TapScanner

**ஐயம் தெளிதல் (துணிதல்):** தலைவி வானுலகப் பெண்ணோ மானுடப் பெண்ணோ என முதலில் ஐயங்கொண்ட தலைவன், பிறகு ஐயம் தெளிந்து இவள் மானுடப் பெண்ணே என்ற முடிவுக்கு (துணிவுக்கு) வருவான். அவ்வாறு முடிவுக்கு வருதற்குப் பின்வருபவை கருவிகளாக (காரணங்களாக அமையும்)

1. வண்டு: பழகிய மலரையே வண்டு மொய்க்கும். தலைவியின் கூந்தலில் சூடியுள்ள மலரிலும் வண்டு மொய்க்கும்.

2. இழை: தலைவி அணிந்துள்ள இழை (அணிகலன்) அது பூவுலகில் பொற்கொல்லன் ஒருவனால் செய்யப் பெற்றது என்பதைத் தெரிவிக்கும்.

3. வள்ளி: தலைவி, மானுடப் பெண்கள்போல் தன் மார்பிலும் தோளிலும் வள்ளி எனப்படும், கருமையால் எழுதிய ஓவியம் வரைந்திருப்பாள்.

4. பூ: வானுலகத்துப் பூ வாடாது; பூலகத்துப் பூ வாடும். தலைவி சூடியிருக்கும் பூவும் வாடியிருக்கும்.

5. கண்: மானுடப் பெண்களுக்குரிய ஊன் கண்ணினையுடையவளாகத் தலைவியிருப்பாள்.

6. அலமரல்: தலைவியின் தடுமாற்ற நிலையும் மானுடப் பெண்களுக்கேயுரியது.

7. இமைப்பு: தெய்வப் பெண் கண் இமைப்பது இல்லை. தலைவி கண் இமைக்காது இருப்பதில்லை.

8. அச்சம்: ஆடவனைக் கண்டு அஞ்சும் இயல்பு தெய்வப் பெண்ணுக்கு இல்லை. ஆனால் தலைவிக்கு இருக்கிறது.

மேற்கூறியவற்றால் தலைவன், தலைவி மானுடப் பெண்ணே என்ற முடிவுக்கு வருவான். மேற்கூறியவை தவிர தலைவியின் கால்நிலத்தில் தோய்தல், வியர்த்தல் முதலியவையும் அவள் பூவுலகப் பெண்ணே என்பதை உறுதிப்படுத்தும். இது பற்றிய தொல்காப்பிய நூற்பா வருமாறு:

*வண்டே இழையே வள்ளி பூவே*
*கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று*
*அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ*
*நின்றவை களையும் கருவி என்ப* (நூற்பா 1041)

அகப்பொருள் இலக்கணம் கூறும் 'நம்பியகப் பெருமாள்' நூலும்

*எழுதிய வல்லியும் தொழில்புனை கலனும்*
*வாடிய மலரும் கூடிய வண்டும்*
*நடையயில் அடியும் புடைபெயர் கண்ணும்*

*அச்சம் பிறவும் அவன்பால் நிகழும்*
*கச்சமில் ஐயம் கூடிவன ஆகும்.* (நூற்பா 5)

என்னும் நூற்பா வரிகளில், மேற்றுகுறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பா கருத்துக்களையே கூறுகிறது.

**கண்கள் காதல் உணர்த்தல்:** மேற்குறிப்பிட்ட காட்சி, ஐயம், ஐயம் தெளிதல் ஆகியன தலைவன், தலைவி ஆகிய இருவரிடமும் காதல் தோன்றிவிட்டது என்பதைத் தெரிவிக்காது. இவை ஏறக்குறைய தலைவனிடம் மட்டும் நிகழும் ஒரு பக்கத்து நிகழ்வுகளே. எனவே இவற்றை ஒருதலைக் காதலாகிய கைக்கிளை' எனக் கூறலாமே தவிர, இருவரிடமும் நிகழும் அன்பின் ஐந்திணை என்னும் இருபக்கத்துக் காதலாகக் கருத முடியாது; தலைவியும் தன் வேட்கையை வெளிப்படுத்தவேண்டும். அப்போது தான் அது இருபக்கத்துக் காதலாகும். அது எப்போது?

தலைவியின் விருப்பத்தை அவள் கண்களே வெளிப்படுத்தும். அவளது கண்கள் இரண்டும் காதலால் அவர்கள் இருவரையும் இணைப்பதற்காகப் பேசாமல் பேசிக்கொள்ளும் குறிப்புரையாகும்.

*நாட்டம் இரண்டும் அரிவு உடம்படுத்தற்குக்*
*கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்* (நூற்பா 1042)

[எ-டு] 'பார்வை ஒன்றே போதுமே
பல்லாயிரம் சொல் வேண்டுமா?' என்னும் பாடல் வரிகள்.

தலைவன் மனக்குறிப்பை தலைவியின் கண்களும் மனமும் மேற்கூறியவாறு ஏற்றுக் கொள்ளும் என்றால் அவர்களிடையே காதல் ஒழுக்கங்கள் நிகழும்.

*குறிப்பே குறித்தது கொள்ளுமாயின்*
*ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்* (நூற்பா 1043)

மேற்குறிப்பிட்ட காட்சி ஐயம், ஐயம் தெளிதல், கண்கள் காதல் உணர்த்தல் ஆகியன அகப்பொருள் இலக்கியங்களில் பாடுபொருளாகவோ கதை நிகழ்வாகவோ அமையும்.

## II. மெய்யுறு புணர்ச்சிக்குத் தலைவன் தலைவியரைத் தூண்டும் அவத்தைகள் (உணர்வுகள்)

அகப்பொருள் இலக்கியங்களில் பாடுபொருளாக அமையும் களவு எனும் காதல் ஒழுக்கத்தில் ஒரு நிகழ்வே இயற்கைப் புணர்ச்சியாகும். ஒரு

3 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1051

தலைவனும் தலைவியும் கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தாமே சந்தித்துக் காதல் கொள்வது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். பருவ வயதில் இயல்பாகத் தோன்றுவதால் இது இயற்கைப் புணர்ச்சி எனப்பட்டது. இது முதலில் உள்ளங்கள் கலந்த உள்ளப் புணர்ச்சியாகவே இருக்கும். ஏனெனில் இதுவே தமிழ் பண்பாடு. காதல் வளர்ச்சிபெற்ற நிலையில் காலப்போக்கில் பின்வரும் அவத்தைகள் தோன்றிய பிறகே அவர்களிடம் உடற்புணர்ச்சி ஆகிய மெய்யுறு புணர்ச்சி நிகழும்.

1. காதலர் இருவரும் கண்ணால் கண்டு கருத்தால் இணைந்த பின் அவருள் ஒருவர்க்கு மற்றவரிடம் பெருவிருப்பம் தோன்றும் (வேட்கை)

"உனக்கென்ன
ஒரு பார்வையை
வீசிவிட்டுப் போகிறய்
என் உள்ளமல்லவா
வைக்கோலாய்ப்
பற்றி எரிகிறது"[4]

- தலைவனுக்குத் தலைவி மீது இருக்கும் பெருவிருப்பத்திற்கு இது எடுத்துக்காட்டு.

2. இடைவிடாது ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டிருப்பர் (ஒருதலை உள்ளுதல்)

(எ-டு) 'முள் போன்ற கூரிய பற்களும், அமுதம் ஊறும் அழகிய சிவந்த வாயும், அகிற்புகையும், சந்தனப் புகையும் மணக்கின்ற கருமணல் போன்ற கரிய கூந்தலும் உடைய தலைவியை நான் நினைத்துக்கொண்டேயிருப்பேன்' என்னும் பொருள்பட குறுந்தொகை 286ஆவது பாடலில் வரும் பின்வரும் வரிகள்:

"உள்ளிக் காண்பென் போல்வல் - முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறும் செவ்வாய், கமழ்அகில்
பேர்அமர் மழைக்கண் கொடிச்சி
மூரல் மறுவலொடு மதைஇய நோக்கே."

3. காதலர்கள் உணவு குறைவதாலும் உள்ளங் கலங்குவதாலும் உடல் மெலிவர் (மெலிதல்)

4. தமக்கு நேரிடும் தீமைகளை நன்மைகளாகக் கூறுவர் (ஆக்கம் செப்பல்)

5. நாணுவரை இறத்தல்: காதல் உணர்வின் மிகுதியால் நாணத்தின் எல்லையைக் காதலர்கள் கடப்பர்.

6. பார்க்கும் பொருள் எல்லாம் காதலர் உறுப்பு போலவே தோன்றும் (நோக்குவ எல்லாம் அவையே போறல்)

---

4 மீரா, கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள், ப.8

Scanned by TapScanner

7. மிகுதியான காதல் உணர்வால் காதலர்கள் தம்மை மறந்த நிலையில் இருப்பர் (மறத்தல்)

8. காதல் உணர்வின் மிகுதியால் காதலர்கள் ஒருவித மயக்க நிலையில் இருப்பர் (மயக்கம்)

9. தம் இணையை அடையாவிட்டால் சாவுதான் என்ற முடிவுக்குக் காதலர்கள் வருதல் (சாக்காடு)

(எ-டு) 'உன்னை நான் பிரிந்தால் உனக்குமுன் இறப்பேன்' என்ற கவிதை வரிகள்.

மேற்குறிப்பிட்டவை காதலர்கள் இருவரிடமும் நிகழும் நிகழ்வுகள்.[5] இவற்றை அவத்தைகள் (துன்ப உணர்வுகள்) என்பர். இந்த அவத்தைகள் தோன்றிய பின்னரே அவர்கள் மெய்யுறுபுணர்ச்சி என்னும் உடற்புணர்ச்சியில் ஈடுபடுவர். இல்லையெனில் உள்ளப் புணர்ச்சியே அவர்களிடம் நீடிக்கும். "விலங்குப் புணர்ச்சியன்று இது. கண்களால் மனக்குறிப்பு ஒத்தபிறகு பலநாட்கள் இவ்வாறாகி ஒருநாள் சாக்காடு போலும் மெய்ப்பாட்டு எல்லை வந்து நெருங்கிப் பழகுவர். உண்மைக் காதலின் வளர்ச்சி இது" என்பர் டாக்டர் தமிழண்ணல்.[6]

## IV. களவொழுக்கத்தில் தலைவன் செயல்களும் கூற்று நிகழ்த்துமிடங்களும்

கொடுப்போரும் கொள்வோரும் இன்றி ஒரு தலைவனும் தலைவியும் சந்தித்துக் காதல்கொள்வது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். இந்த இயற்கைப் புணர்ச்சி முதலிலேயே மெய்யுறு புணர்ச்சி என்னும் உடற்புணர்ச்சியாக இருக்காது. "செம்புலப்பெயல் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்த" உள்ளப் புணர்ச்சியாகவே இருக்கும். ஏனெனில் தலைவன் பெருமையும் பெரும் அறிவுத்திறனும் உடையவனாக இருப்பான்.

*பெருமையும் உரனும் ஆடூஉ மேன* (நூற்பா 1044)

தலைவியும் அஞ்சவேண்டுவனவற்றிற்கு அஞ்சுகின்ற அச்ச உணர்வும், நாணமும், அறிந்தும் அறியாதவள் போலிருக்கும் அடக்கமுடைமையாகிய மடனும் ஆகியனவற்றை முதன்மையாகக் கொண்ட நற்பண்புகளை உடையவளாயிருப்பாள்.

*அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த*
*நிச்சமும் பெண்பாற்கு உரிய* (நூற்பா 1045)

உள்ளப் புணர்ச்சிக்குப் பின்பே அவர்களிடம் உடற்புணர்ச்சி நிகழும். மேற்குறிப்பிட்ட இயற்கைப் புணர்ச்சியின் போதும் தலைவன் கூற்று

5 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1046
6 தமிழண்ணல், தொல்காப்பியம், பொருளதிகாரம் I, ப.134

நிகழ்த்துவான்; அவனது பல இயல்புகளும் வெளிப்படும். அவற்றை இங்குக் காணலாம்.

**உள்ளப்புணர்ச்சியில் தலைவன் கூற்று[7]:**

தலைவன் தலைவியை முன்னிலைப்படுத்திச் சில சொற்களைக் கூறலாம் (முன்னிலையாக்கல்)

[எ-டு] நற்றிணை 155ஆவது பாடலில் 'நீ கடல் தெய்வமோ கரிய உப்பங்கழியில் வந்து நின்றாயோ' எனக்கூறுவது.

தன் சொற்களைக் கேட்டு அதன்படி நடக்க அவளை அவன் வேண்டலாம் (சொல்வழிப்படுத்தல்)

தலைவியின் அழகுபற்றி தலைவன் எடுத்துரைக்கலாம் (நன்னயம் உரைத்தல்)

[எ-டு] "உலகத்தின் தலைசிறந்த ஓவியர்கள்
வரைந்துள்ள ஓவியங்களைப் பார்த்துள்ளேன்
என்றாலும் எனக்குப் பிடித்த ஓவியம்
உன் முகம்தான்"

தன் அழகைத் தலைவன் பாராட்டுவதால் தலைவியிடம் புன்னகை மிகுதியும் தோன்றலாம். அதனை அவன் அறிந்து பேசலாம். (நகை நனிஉறா அந்நிலை அறிதல்)

காதல் உணர்வால் தனக்கு ஏற்பட்ட உடல் மன மெலிவைத் தலைவியிடம் தலைவன் விளக்கிக் கூறலாம் (மெலிவு விளக்குறுத்தல்)

தலைவி மீது தனக்குள்ள அன்பை அவன் எடுத்துரைக்கலாம். (தன்னிலை உரைத்தல்)

தலைவிக்குத் தன்மீது நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசித் தலைவியிடம் தெளிவை ஏற்படுத்தலாம் (தெளிவகப்படுத்தல்)

**மெய்யுறு புணர்ச்சியில் தலைவன் செயல்களும் கூற்றும்[8]**

1. தலைவன் காதல் உணர்வு மேம்படத் தலைவியின் உடலைத தொட்டுப்பழகி அவள் கூச்சத்தைப் போக்க முயலாம். (மெய்தொட்டுப் பயிறல்)

[எ-டு] குறுந்தொகை 272ஆவது பாடலில்
'மணம் வீசுகின்ற கருங்கூந்தலையுடைய தலைவியின் தோளைத் தழுவினான்' என்னும் பொருள்பட வரும் வரிகள்.

---

7. ... 1947

2. மிகவும் மிகையாகத் தலைவன், தலைவியின் உடல் அழகைப் பாராட்டலாம் (பொய் பாராட்டல்)

[எ-டு] “நான் பார்த்ததிலே உன் ஒருத்தியைத்தான்
நல்ல அழகியென்பேன் நல்ல அழகியென்பேன்” எனும் கவிதை வரிகள்.

3. தலைவன் தலைவியை நெருங்கித் தழுவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு தழுவலாம் (இடம் பெற்றுத் தழாஅல்)

4. நாணத்தினால் தலைவி விலகிச் சென்றால், அதனால் தனக்கு நேரிடும் இடையூறுகளைத் தலைவன் அவளிடம் கூறலாம் (இடையூறு கிளத்தல்)

5. மேற்குறிப்பிட்ட இடையூறு குறித்துத் தலைவன் நீண்டநேரம் நினைத்து இரங்கலாம் (நீடு நினைந்து இரங்கல்)

6. தலைவியைக் கூடும் வாய்ப்பு கிடைக்குமாயின் தலைவன் அவளைக் கூடலாம் (கூடுதல் உறுதல்)

7. புணர்ச்சி நுகர்ச்சி இன்பத்தில் தலைவன் திளைக்கலாம் (சொல்லிய நுகர்ச்சி)

8. புணர்ச்சியால் தலைவிக்கு ஏற்படும் தீராத அச்சத்தைத் தலைவன் தீர்த்து உறுதிக்கூறித் தேற்றலாம் (தீராத் தேற்றம்)

9. மீண்டும் மீண்டும் தலைவியை அடையப்பெறும் போதெல்லாம் தலைவன் மகிழலாம் (பெற்றவழி மகிழ்தல்)

[எ-டு] குறுந்தொகை 70ஆவது பாடலில் ‘நான் தழுவும் போதெல்லாம் தலைவி மிகமென்மையுடையவளாக இருக்கிறாள்’ என்னும் பொருள்படத் தலைவன் மகிழ்ந்து கூறுவது.

மேற்கூறியவாறு தான் கூடிய தலைவி தன்னை விட்டு பிரியும்போது தலைவன் கலங்கலாம். (பிரிந்தவழிக் கலங்கல்)

[எ-டு] ‘அவள் பறந்து போனாளே என்னை மறந்து போனாளே’ என்னும் பாடல் வரிகள்

தலைவியுடன் வாழப்போகும் நிலையான இல்லற வாழ்க்கை நெறிகளைப் பற்றிச் சிந்தித்து அதற்குரியனவற்றைப் பற்றித் தலைவன் பேசலாம் (நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைத்தல்)

தன் களவொழுக்கத்தில் குற்றங்கண்டு கூறிய பாங்கனாகிய தோழனிடம், அவன் ஏற்கத்தக்க வகையில் தலைவன் தன் காதலை விளக்கலாம் (குற்றங்காட்டிய வாயில் பெட்பு)

8 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1048 முற்பகுதி

**தோழியிற் கூட்டத்தில் தலைவன் கூற்று:**

தோழியின் துணையுடன் தலைவன் தலைவியைக் கூடுவது தோழியிற் கூட்டம் எனப்படும். இதில் தலைவன் பின்வருமாறு கூற்று நிகழ்த்தலாம்

1. தலைவியைக் கூடிய தலைவன் தலைவியை மீண்டும் கூடவிரும்புவான். எனவே தலைவிக்கு மிகவும் விருப்பமான நெருங்கிய தோழியிடம் வந்து தலைவியைக் கூட உதவுமாறு இரந்து வலியுறுத்திக் கூறலாம் (பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்)

[எ-டு] குறுந்தொகை 222ஆவது பாடலில், ஒரு தலைவன் தலைவியைக் கூடவிரும்பி அவளுக்கு நெருக்கமான தோழியிடம் வருகிறான்.[9] புனல் விளையாட்டின் போது புணையின் [தெப்பத்தின்] தலைப்பகுதியைத் தலைவி பற்றுவாளாயின் தோழியும் அதையே பற்றுவாள். கடைப்பகுதியைத் தலைவி பற்றுவாளாயின் அத்தோழியும் அதையே பற்றுவாள். இத்தகைய நெருக்கமான, தலைவிக்கு விருப்பமான தோழியிடம் தலைவன் வந்து குளிர்ச்சியான கண்ணும் தளிர் போன்ற மென்மையான இயல்பும் கொண்ட தலைவியைத் தான் அடைய உதவுமாறு இரந்து வலியுறுத்தி வேண்டுகிறான்.

2. தலைவியை அடைய உதவுமாறு தோழியிடம் இரந்து வேண்ட வரும் தலைவன் சில நேரங்களில் 'ஊர் யாது பேர் யாது' எனவும் 'என்னால் அம்பெய்யப்பட்ட புலியையோ யானையையோ மானையோ கண்டீரோ', எனவும் வினவுவது போல வந்து பிறகு தோழியிடம் மனக்குறையைக் கூறி இரக்கலாம். (ஊரும் பேரும் கெடுதியும் பிறவும் நீரிற்குறிப்பின் நிரம்பக்கூறித் தோழியைக் குறையுறும் பகுதி)

3. உண்மையை அறிவதற்காகத் தோழி தலைவனிடம் தலைவியைப் பற்றிக் குறை கூறலாம். (குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல்)

4. தலைவனும் மனந்தளராமல் தோழியை மீண்டும் மீண்டும் இரக்கலாம் (தண்டாது இரப்பு)

5. யாதேனும் கூறி வேற்றுவழிகளிலும் தோழி தலைவனை அலைக்கழிக்கலாம். அப்போதும் தலைவன் பேசலாம் (மற்றைய வழி)

6. தோழியைக் கெஞ்சிக் கொண்டிருப்பதை விட தானே நேரே சென்று தலைவியை அடையலாம் எனக்கூறித் தலைவியிடம் சென்ற தலைவன் அவளைத் தழுவிக்கொள்ளலாம் (சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகை)

7. மேற்குறிப்பிட்ட நிகழ்வை அறிந்த தோழி அதை அறியாதவள் போல் தலைவனிடம் பேசலாம் (அறிந்தோள் அயர்ப்பு) அப்போது தலைவன் பேசலாம்.

---

9 தொல்காப்பியம் *பொருளதிகாரம்*, நூற்பா 1048 பிறபகுதி

8. தலைவியை மீண்டும் சந்திப்பதற்குத் தோழி மீண்டும் மறுக்கும்போது தலைவன் இதனால் தனக்கு வரும் கேட்டையும் தன் பெருமையையும் கூறித் தோழியை மீண்டும் இரக்கலாம் (கேடும் பீடும் கூறல்)

9. ஆனால் தோழி அவனை அங்கிருந்து அப்புறப்படுத்தும் நிலையில், தலைவன் பேசலாம் (நீக்கலின் ஆகிய நிலை)

10. எனவே தலைவியை அடையப் பெறாவிடில் மடலேறிவிடுவேன் எனத் தலைவன் தோழியை அச்சுறுத்தலாம் (மடன்மா கூறும் இடன்)

**தோழியிற் கூட்டத்தில் தலைவன் பேசும் முக்கிய சூழல்கள்**[10]:

1. 'தலைவியுடன் இணைய உதவ வேண்டும்' எனத் தோழியிடம் தலைவன் வேண்டுகோள் விடுக்கும் போது 'மீண்டும் மீண்டும் தலைவியைச் சந்திக்க அவன் வருவது பண்புடைமை அன்று' எனக் கூறித் தோழி மறுப்பு தெரிவிக்கலாம். அப்போது தன் நிலையை வெளிப்படுத்தும் வகையில் தலைவன் தோழியிடம் கூற்று நிகழ்த்தலாம் (பண்பிற் பெயர்ப்பு)

2. தலைவியின் மீதுதான் கொண்ட காதலால் தான் மிகவும் பரிதவித்து உடல் மெலிவதைத் தோழியிடம் கூறும் வகையில் தலைவன் கூற்று நிகழ்த்தலாம் (பரிவுற்று மெலிதல்)

(எ-டு) ஐங்குறுநூறு 256ஆவது பாடலில் 'காதலால் வருந்துகின்ற துன்பத்தை எனக்குத் தருபவள் தலைவி' என்னும் பொருள்பட 'ஆரணங்கினளே' எனத் தொடங்கித் தலைவன் கூறுவதாக வரும் வரிகள்.

3. தோழி அன்போடும் சிரிப்போடும் தலைவனின் வேண்டுகோளை மறுக்கும் போதும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம் ( அன்புற்று நகுதல்)

(எ-டு) நற்றிணை 75ஆவது பாடலில் 'தலைவியிடம் நான் கொண்ட காதல் துன்பத்தால் வருந்திய என் நெஞ்சம் மகிழும்படியாக அன்புடனும் சிரிப்புடனும் பேசு. வேறுவிதமாகப் பேசினால் என் உள்ளம் உடைந்துவிடும்' என்னும் பொருள்பட 'நகாஅது உரைமதி; உடையும் என் உள்ளம்' எனத் தோழியிடம் கூறுவனவாக வரும் வரிகள்.

4. தலைவியை அடைவதற்குத் தோழியின் உடன்பாட்டினைப் பெற்று மகிழும்போதும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம். (அவள் பெற்று மலிதல்)

(எ-டு) ஐங்குறுநூறு 175ஆவது பாடலில் 'எமக்கு நீ அருள் செய்தாய். நீ நிலைத்து வாழ்க' என்னும் பொருள்பட,
'எமக்கு நயந்து அருளினை ஆமின்......வாழியோ மடந்தை'
எனத் தலைவன் கூறுபவனாக வரும் வரிகள்.

10 தொல்காப்பியம் *பொருளதிகாரம்*, நூற்பா 1049

5. தான் தலைவியைச் சந்திக்க வரும் வழியில் தனக்கு ஏற்படும் இடையூறுகளைத் தோழியிடம் கூறுவதற்காகவும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம்.

[எ-டு] நற்றிணை 192ஆவது பாடலில் 'கரடிகள் மேய்கின்ற மலைவழியில் நான் வருவது தலைவியின் நலம் கருதியே' என்னும் பொருள்படத் தலைவன் கூறுவனவாக வரும் வரிகள்.

தோழியிற் கூட்டத்தின்போது மேற்குறிப்பிட்டவாறெல்லாம் தலைவன் நிகழ்த்தும் கூற்று அகப்பொருள் இலக்கியங்களில் இடம்பெறும்.

**களவொழுக்கத்தில் மேலும் சில தலைவன் கூற்றுக்கள்[11]:**

மறைவான காதல் ஒழுக்கமாகிய களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைவனும் தலைவியும் பகல் நேரத்தில் இன்ன இடத்தில் கூடுவது என்று குறித்துக் கொண்டு கூடுமிடம் பகற்குறி என்றும் இரவு நேரத்தில் கூடுமிடம் இரவுக்குறி என்றும் குறிப்பிடப்படும். இவ்விருவகையான குறியிடங்களிலும் தலைவி தன்னைச் சந்திக்க வராதபோது தலைவன் கூற்று நிகழ்த்தலாம் (இருவகைக் குறி பிழைப்பாகிய இடம்)

[எ-டு] ஐங்குறுநூறு 298ஆவது பாடலில் 'என் காதலி என்னைச் சந்திக்கக்குறியிடம் வராமல் போனாலும் அவளை நான் நினைப்பதை ஒருபோதும் மறவேன்' எனும் பொருள்படத் தலைவன் கூறுவனவாக வரும் வரிகள்.

பகற்குறி, இரவுக் குறிகளில் தலைவி குறிப்பிட்ட நேரத்தில் வராமல் பொழுது சென்று கொண்டே இருந்தாலும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம் (காணா வகையில் பொழுது நனி இகப்பு)

தலைவியைக் காணும் ஆசையில் தலைவன் குறியிடம் சென்று காதல் வேட்கையில் செயலற்று மயங்கி நிற்கும்போதும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம் (காட்சி ஆசையில் களம்புக்குக் கலங்கி வேட்கையின் மயங்கிய கையறுபொழுது)

ஒரு வீட்டிற்கு ஒருவர் விருந்தாகச் செல்வதற்குப் பொருத்தமில்லாத நேரம் அவ்வீட்டிலுள்ளோர் உணவுண்ணும் நேரமாகும். அத்தகைய நேரத்தில் தலைவன் தற்செயலாகத் தலைவியின் இல்லம் செல்ல நேரிடலாம். எனினும் தலைவியின் வீட்டிலுள்ளோரும் அவனைப் புறக்கணிக்காமல், விருந்தினன் என நினைத்து ஏற்றுக்கொள்ளலாம். இது பற்றித் தலைவன் கூற்று நிகழ்த்தலாம் (புகாக் காலை புக்கு எதிர்ப்பட்டுழிப் பகாஅ விருந்தின் பகுதி)

[எ-டு] ஐங்குறுநூறு 312ஆவது பாடலில் 'இரவில் என்னுடன் கூடிய தலைவி, பகலில் அவள் வீட்டிற்கு விருந்தினனாகச் சென்றபோது என்னை

11 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1053

Scanned by TapScanner

யாரென்றே காட்டிக் கொள்ளவில்லை' என்னும் பொருள்படத் தலைவன் கூறுவனவாக வரும் வரிகள்.

குறியிடத்துக்குத் தவறாது வருகை தருவதாகிய தலைவியின் வரவின் போதும் தலைவன் மகிழ்வுடன் கூற்று நிகழ்த்தலாம் (வேளாண் எதிரும் விருப்பு).

[எ-டு] ஐங்குறுநூறு 293ஆவது பாடலில் தலைவி தவறாமல் குறியிடம் வருகிறாள்; பின்புறமாக வந்து தலைவன் கண்களைத் தன் கைகளால் பொத்தினாள்* தலைவன் மிக மகிழ்ந்து 'மயிலின் சாயல் கொண்ட உன்னையன்றித் தவறாமல் வருகை தந்து என் கண்களைக் கட்டி விளையாடும் உரிமை பெற்றவர் வேறு யார்?' என்னும் பொருள்பட

'தோகை மாட்சிய மடந்தை
நீ அலது உளரோ – என் நெஞ்சு அமர்ந்தோரே' எனக் கூறுவது.

நெடுந்தொலைவுக்கன்றி அண்மையிடத்துக்குத் தலைவியைப் பிரிந்து செல்லும் சிறுபிரிவின் கண்ணும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம் (தாளாண் எதிரும் பிரிவில்).

[எ-டு] ' இன்றே தலைவியைப் பிரிந்து செல்வேன்
இன்றே திரும்பி வருவேன்' எனும் பொருள்பட
'இன்றே சென்று வருதும்' எனத் தலைவன் கூறுவதாக வருவன.

சில சமயங்களில் தலைவனைக் கூடமுடியாமல் தலைவியின் மனத்தை நாணம் அலைக்கழிக்கும். அப்போது தலைவன் அவளை அனுப்பிவைத்து விட்டு அதுபற்றிக் கூற்று நிகழ்த்தலாம். (நாணு நெஞ்சலைப்ப விடுத்தற்கண்)

தலைவியைத் தலைவன் திருமணம் செய்யவேண்டும் என்ற குற்றமற்ற சொற்களைத் தோழி தலைவனிடம் கூறலாம். அப்போது அதற்கு மாறான நிலையில் - அதாவது மறைவான களவொழுக்கத்தையே விரும்பித் தொடரும் வகையில் தோழிக்குக் கூற்று நிகழ்த்தலாம் (வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய எதிர்).

[எ-டு] குறுந்தொகை 29ஆவது பாடலில் 'உலராத பச்சையான மண்கலத்தில் மழைநீர் விழுந்தால் அம்மண்கலம் அதைத் தாங்காமல் கரைந்துவிடும். அவ்வாறே தலைவியை நான் மணம் செய்து கொள்ளவேண்டும் என்பதற்காக அவளுடன் நான் களவொழுக்கம் கொள்வதற்கு நீ மறுத்தால் என் உள்ளமும் உடைந்துவிடும்' எனும் பொருள்பட

"பெயல் நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா"

எனத் தலைவன் கூறுவனவாக வரும் வரிகள்.

---

* கண்களைப் பொத்துதல் – கண்களை மறைத்தல்

தோழி கூறியதைக் கேட்டுத் தலைவன் தலைவியைத் திருமணம் செய்வதற்கு உடன்படும்போதும் கூற்று நிகழ்த்தலாம். (வரைவு உடம்படுதல்)

தலைவியைத் திருமணம் செய்து தரமாட்டோம் என்று குற்றமிகுந்த சொற்களைத் தலைவியின் உறவினர்கள் கூறும்போதும் தலைவன் கூற்று நிகழ்த்தலாம்.

[எ-டு] அகநானூறு 280 ஆவது பாடலில் தலைவியை அவள் உறவினர்கள் தலைவனுக்கு மணம் செய்துதர மறுக்கின்றனர். தலைவன் மிக வருந்தி 'பெரும் பொருள் கொடுத்தாலும் தலைவி எனக்குக் கிடைத்தற்கு அரியளாயுள்ளாள். அவளுடைய தந்தையுடன் நான் சேர்ந்தும் அவனைப் பணிந்தும் அவனுக்குப் பணிவிடை செய்தும் வந்தால் அவன் தலைவியை எனக்கு மணம் செய்து தருவானோ?' எனும் பொருள்பட

'நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை
பெறல்அருங் குரையள் ஆயின்
.................
படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பின்
தருகுவன கொல்லோ' எனத் தலைவன் கூறுவது.

## V. களவொழுக்கத்தில் தலைவியின் செயல்களும் கூற்று நிகழ்த்துமிடங்களும்

அகப்பொருள் இலக்கியங்களில் இடம் பெறும் நாயகி (Heroine) 'தலைவி' என்றும் 'தலைமகள்' என்றும் குறிப்பிடப்படுகிறாள். அவள் பெண்மைக்குரிய பெருமைமிகு பண்புகளான அச்சமும், நாணமும், நிறையும் உடையவளாய்த் திகழ்கிறாள். தலைவனுடன் களவொழுக்கம் மேற்கொள்ளும் காலத்தில் அவள் செய்யும் செயல்கள் சிலவற்றையும் கூற்று நிகழ்த்துமிடங்களையும் (பேசும் இடங்களையும்) இனிக் காணலாம்.

### தலைவியின் செயல்கள்[12]

தலைவியும் தலைவனும் எதிர்பாராமல் சந்தித்துக் காதல் வயப்பட்டு மறைவாகக் காதல் ஒழுக்கம் மேற்கொள்ளும் தொடக்க காலத்தில் தலைவி தலைவனைப் பெரும்பாலும் நேருக்கு நேர் பார்த்து மகிழாமல் மறைவாக நின்று அவனைக் கண்டு களிப்படையலாம். (மறைந்தவள் காண்டல்)

[எ-டு] 'மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன' என்னும் திரைப்படப்பாடல்

சில நேரங்களில் தலைவன் தன்னை நேருக்குநேர் பார்த்து மகிழுமாறு தன்னை அவனிடம் காட்டிக் கொண்டும் நிற்கலாம் (தற்காட்டுறுதல்)

12 தொல்காப்பியம் *பொருளதிகாரம்*, நூற்பா 1057

மேற்கூறியவாறு தலைவனிடம் தன்னைக் காட்டிக் கொண்டு நிற்கும் நேரத்தில், காதல் உணர்வுமிகுந்த நிலையில் தலைவன் கூறும் சொற்களைக் கேட்டு நாணத்தால் தலைவி மறுமொழி கூறாது நிற்கலாம். (நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்)

## தலைவி கூற்று நிகழ்த்தும் இடங்கள்:

### புணர்ச்சி பற்றித் தலைவி பேசும் இடங்கள்:

தலைவன் புணர்ச்சிவேட்கையை வெளிப்படுத்தித் தலைவியை நெருங்கும்போது தலைவி அதற்கு உடன்படாது மறுத்துப் பேசலாம் (வழிபாடு மறுத்தல்)

(எ-டு) கலித்தொகை 108ஆவது பாடலில் தலைவி தலைவனிடம் 'உன்னிடம் நான் மயங்கி உனது இந்த விருப்பத்திற்கு நான் உடன்படமாட்டேன்' என்னும் பொருள்படக் கூறுவது.

தலைவன் புணர்ச்சி வேட்கையை வெளிப்படுத்துகின்ற மற்றொரு நேரத்தில் தலைவி முன்பு மறுத்தது போல் மறுக்காமல் அதற்கு உடன்படலாம்; உடன்பட்டுப் பேசலாம் (மறுத்தெதிர் கோடல்)

(எ-டு) மேற்குறிப்பிட்ட கலித்தொகை 108ஆவது பாடலில் வரும் தலைவி தலைவனிடம் "என் மீது கொண்ட காதலினால் நீ வருந்தும் வருத்தத்தைப் பார்க்கும் போது உன் விருப்பத்திற்கு நான் உடன்பட்டுத்தான் ஆகவேண்டும்" என்னும் பொருள்படக் கூறுவது.

தலைவனின் புணர்ச்சி வேட்கைக்குத் தலைவி தன் புன்முறுவலையே இசைவான பதிலாகத் தலைவி வெளிப்படுத்தி நிற்கலாம் (பழதீர் முறுவல் சிறிதே போற்றல்)

தலைவன் கைபட்டுப் புணர்ச்சி நிகழ்ந்தபின் இப்படிச் செய்து விட்டோமே எனத் தலைவி கலங்கிப் பேசலாம் (கைபட்டுக் கலங்குதல்)

(எ-டு) கலித்தொகை 54-ஆவது பாடலில் வரும் தலைவி 'தன்பெண் யானையைக் காதல் கொண்டு தழுவும் ஆண் யானை போல் என் மேனி முழுவதும் தழுவி என்னைத் தன் தலைவன் தன் வசமக்கிவிட்டான்' எனப் புணர்ச்சி பற்றி வருந்திக் கூறுவது.

மேற்குறிப்பிட்டதுபோல் புணர்ச்சி நிகழும்போது, அதற்காகத் தலைவி மிக நாணங்கொண்டும் பேசலாம் (நாணுமிகவருதல்)

**சிறுபிரிவுக்கும் வருந்துதல்:** தலைவன் தலைவியைச் சிறிது நேரமே பிரிந்து செல்கின்ற சிறு பிரிவுக்கும் தலைவி வருந்திக் கூற்று நிகழ்த்தலாம் ('இட்டுபிரிவு இரங்கல்)

[எ-டு] ஐங்குறுநூறு 221ஆவது பாடலில் வரும் தலைவி "என் அழகு என்னைவிட்டு நீங்குமாறும் 'என்மேனி பசலையுறுமாறும் தலைவன்' என்னைவிட்டுப் பிரிந்து செல்லும் பிரிவை நான் எங்ஙனம் தாங்குவேன்" என்னும் பொருள்படக் கூறுவது.

**தலைவன் வருகை பற்றிப் பேசுதல்:** தலைவன் பிரிவுக்காக மேற்கூறியவாறு வருந்தும் தலைவி, தன் வீட்டில் தன் பெற்றோர் தனக்கு ஏற்படுத்தியிருக்கும் அரிய காவலைத் தோழியிடம் கூறித்தலைவன் தன்னைச் சந்திக்க வரவேண்டாம் எனக் கூறுமாறு கூறலாம் (மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித்தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தல்)

மேற்கூறியவாறு தலைவனிடம் தோழி கூறியும் தலைவன் தலைவியைச் சந்திக்க வரலாம். அப்போது தலைவி இவ்வாறு சந்திக்க வருவதால் தங்கள் களவொழுக்கம் வெளிப்பட்டு ஊரார் பழிதூற்றுவதாகிய அலர் தோன்றும் என்று எச்சரிக்கும் வகையில் தலைவி தோழியிடம் கூறலாம் (வந்தவழி எள்ளல்)

தலைவன் அலர்முதலிய எதுகுறித்தும் கவலைப்படாமல் தன்னைச் சந்திக்க வருவது பற்றி வருந்தித் தலைவி கூற்று நிகழ்த்தலாம் (விட்டுயிர்த்தி அழுங்கல்*)

அலர் முதலியவை குறித்துத் தலைவிக்கு ஏற்படும் கலக்கத்தை நீக்கித் தெளிவு ஏற்படும் வகையில் தலைவன் கூறுவதை ஏற்காமல் தலைவி மறுத்துப் பேசலாம் (நொந்து தெளிவு ஒழித்தல்)

அலர் முதலிய காரணங்களுக்காகத் தலைவன் தன்னைச் சந்திக்க வரவேண்டாம் எனக் கூறும் தலைவி, அதன்படி தலைவன் வராமலிருக்கும் போது அதுகுறித்து அஞ்சிக் கூற்று நிகழ்த்தவும் செய்யலாம் (அச்ச நீடினும்)

**நெடும் பிரிவுக்கு வருந்துதல்:** தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் நெடும் பிரிவின் போதும் தலைவி கலங்கிக் கூற்று நிகழ்த்தலாம் (பிரிந்த வழிக் கலங்கல்)

[எ-டு] ஐங்குறுநூறு 295ஆவது பாடலில் "தலைவன் சென்று விட்டான். தலைவனுடன் என் மனமும் சென்றுவிட்டது. அது மீண்டும் என்னிடம் திரும்பி வருமா?" என்னும் பொருள்படத் தலைவி வருந்திக் கூறுவது.

பிரிந்து சென்ற தலைவன் திரும்பிவரும்போது அந்த மகிழ்ச்சியிலும் தலைவி கூற்று நிகழ்த்தலாம் (பெற்றவழி மலிதல்)

[எ-டு] அகநானூறு 332ஆவது பாடலில் 'பிரிந்து சென்று திரும்பிவந்த தலைவன் என்னைத் தழுவிய தழுவல் அவன் முதன்முதலாக என்னைத் தழுவிய தழுவல் போன்று பேரின்பம் தந்தது' என்னும் பொருள்படத் தலைவி கூறுவது.

* இட்டுப்பிரிவு – சிறுபிரிவு; அழுங்கல் – வருந்தல

காவல் மிகுதியில் வருந்துதல்: தலைவன் தலைவியைச் சந்திக்க வருவது சில நேரங்களில் தடைபடும்போது, தலைவியின் பெற்றோர் ஏற்படுத்தியிருக்கும் காவல் மிகுதியால் தான் தலைவன் தலைவியைச் சந்திக்க வரவில்லை எனத் தோழி கூறும்போது அதை ஏற்காமல் தலைவி பேசலாம் (வருந்தொழிற்கு அருமை வாயில் கூறினும் கூறிய வாயில் கொள்ளாக் காலை)

தலைவியின் களவொழுக்கம் வெளிப்பட்டு தலைவியை அவள் பெற்றோர் வீட்டில் சிறைவைக்கும் நிலையில் தலைவி மனமுடைந்து தோழியிடம் முன் நிகழ்ந்த தன் காதல் ஒழுக்கங்கள் சிலவற்றைக் கூறலாம் (மனைப் பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயர்த்தல்)

**களவொழுக்கம் குறித்துத் தோழியிடம் கூறுதல்:** தலைவனுடன் தான் மேற்கொண்ட களவொழுக்கம் வெளிப்படாத நிலையிலும் தலைவி, தோழியிடம் தன் களவொழுக்கம் குறித்து எடுத்துரைக்கலாம் (உயிராக் காலத்து உயிர்த்தல்)

**பிறர் திருமணம் பேச வரும்போது பேசுதல்:** தன்னைத் தலைவன் அல்லாத பிறன் ஒருவன் மணம் செய்துகொள்ள வந்தால் அதை மாற்றும் வகையில் தலைவி பேசலாம் (வேற்று வரைவுவரின் அது மாற்றுதல்)

[எ-டு] ஐங்குறுநூறு 110ஆவது பாடலில் 'அயலான் திருமணம் பேசி வந்துள்ள நிலைமை மாற தலைவன் உதவியை நான் நாடியுள்ளேன்' என்னும் பொருள்படத் தலைவி பேசுவதாக வருவது.

பிறர் தன்னைத் திருமணம் செய்யவருவதை மாற்ற நினைத்துத் தலைவி தன் பெற்றோரிடமும் பேசலாம். அப்போது தலைவியின் பெற்றோர் தலைவி அவ்வாறு பேசுவதற்கான காரணத்தை ஆராயமுயலலாம். அப்போது தன் களவொழுக்கத்தை மறைக்கும் வகையில் தலைவி பேசலாம் (நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தவை மறைத்தல்)

**காதல் சோதனையில் பேசுதல்:** விதியின் வலியினால் தலைவன் தலைவியர்க்கு இடையே ஏற்பட்ட மாறாத மனஒருமைப்பட்ட நட்பினுக்கு வரும் இடையூறுகள் ஏற்படும்போது, முன்பு தலைவன் தன் மெய்தொட்டுப் பயின்றதையும், தன் அழகை மிகையாகப் பாராட்டியதையும், தன்னை நெருங்கித் தழுவியதையும், தழுவலிலிருந்து தலைவி தன்னை விலகிச் செல்வதால் தனக்குத் துன்பம் ஏற்படும் எனத் தலைவன் கூறியதையும், அந்த இடையூறு குறித்து நெடுநேரம் இரங்கியதையும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தலைவன் தன்னைக் கூடியதையும், அந்த இன்பத்தில் திளைத்ததையும் தலைவிக்கு ஏற்பட்ட தீராத அச்சத்தைத் தீர்த்து உறுதி

* வாயில் – தோழி; உயிராக்கலாம் – வெளிப்படாத காலம்

கூறியதையும் ஆகிய எட்டு வகை நிகழ்வுகளையோ[13] அவற்றுள் ஏதேனும் ஒன்றையோ நினைத்து தலைவி தனக்குத்தானே ஆறுதலையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் தலைவி கூற்று நிகழ்த்தலாம் (பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள் அருமைசான்ற நாலிரெண்டு வகையின் பெருமை சான்ற இயல்பு)

**தலைவன் மிரட்டலில் பேசுதல்:** தலைவன் மடலேறுவேன் எனப் பொய்யாக மிரட்டும் போதும் தலைவி கூற்று நிகழ்த்தலாம் (பொய்தலை அடுத்த மடலின் கண்)

**தோழியின் ஆறுதலில் பேசுதல்:** தலைவன் பிரிவு முதலியன குறித்துத் தலைவி கண்ணீர் சிந்தும்போது, தலைவியின் கண்ணீரைத் தோழி துடைக்கலாம். அப்போது தலைவி கூற்று நிகழ்த்தலாம். (கையறுதோழி கண்ணீர் துடைப்பினும்)

**வெறியாடல் அஞ்சிப்பேசுதல்:** களவொழுக்கத்தினால் தன் உடலில் ஏற்பட்ட மாற்றங்கண்டு தன் தாய், செவிலித்தாய் முதலியோர் தன் உடல் மெலிவைப்போக்க வேலனுக்கு வெறியாடல் நிகழ்த்துவரோ என்று தலைவி அஞ்சலாம். அப்போதும் அவள் பேசலாம். (வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்)

**குறியிடம் பிழைக்கும்போது பேசுதல்:** தலைவன் தலைவியைச் சந்திப்பதற்குக் குறித்துச் சொன்ன குறியிடம் ஒன்றாக இருக்கலாம். தலைவி அவனைச் சந்திக்கச் செல்லுமிடம் வேறாக இருக்கலாம். தலைவன் சொன்ன குறியிடத்துக்கும் தான் சென்ற குறியிடத்துக்கும் உள்ள ஒற்றுமை கண்டு தலைவி குழம்பி நிற்கலாம். அப்போது அவள் கூற்று நிகழ்த்தலாம். (குறியின் ஒப்புமை மருளல் கண்ணும்)

**மணநாள் நெருங்கும்போது பேசுதல்:** தலைவன் தலைவியை மணம் செய்யப் போகும் நாள் நெருங்கி வரும்போதும் தலைவி பேசலாம் (வரைவு தலைவரினும்)

தன் களவொழுக்கத்தைப் பிறர் அறியும்போதும் தலைவி கூற்று நிகழ்த்தலாம் (களவு அறிவுறினும்)

**காவலின் போது பேசுதல்:** தன் களவொழுக்கம் குறித்து ஐயுற்று தன் சுற்றத்தவர் தன்னைப் புறம் செல்லாமல் காக்கும் போதும் தலைவி பேசலாம் (தமர் கற்காத்த காரண மருங்கினும்)

**தன்தவறுணரும் போது பேசுதல்:** தலைவன் தன்னைச் சந்திப்பதாகக்

13 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1048

Scanned by TapScanner

கூறிய குறி குறித்துத் தெளிவாக அறியாததால் தலைவி அங்கு செல்லத் தவறலாம். தலைவன் அங்கு வந்து தலைவியைக் காணாமல் திரும்பிச் சென்றிருக்கலாம். இவையெல்லாம் தன் தவறால் வந்தவை எனத் தலைவி தன்னைத் தேற்றலாம். அப்போது அவள் பேசலாம். (தன் குறி தள்ளிய தெருளாக் காலை வந்தனன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன் பிழைப்பாகத் தழீஇத்தேறலும்)

**தலைவன் பற்றிப் பேசுதல்:** தோழி சில சமயங்களில் தலைவனைக் குறை சொல்லலாம். அதுகேட்ட தலைவி, தலைவன் குற்றமற்றவன் என இயல்பாகக் கூறலாம் (வழுவின்றி நிலைஇய இயற்படுபொருளினும்)

தலைவன் தன்னைச் சந்திக்க வரும் வழியும் நேரமும் குற்றம் உடையன ஆதலால் தலைவியிடம் அச்சமாகிய அழிவு கலந்த சிந்தனை தோன்றலாம். அப்போதும் தலைவி பேசலாம். (பொழுதும் ஆறும் புரைவது அன்மையின் அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்)

தன்னிடம் காதல் உணர்வு பெருகிய நிலையிலும் தலைவி பேசலாம். (காமஞ் சிறப்பினும்)

தலைவன் மீது அன்பு மிகுந்த நிலையிலும் தலைவி பேசலாம் (அவன் அளி சிறத்தல்)

தலைவன் தன்னைத் திருமணம் செய்வான் என்ற பாதுகாப்பான சிந்தனையில் தோன்றிய மகிழ்ச்சியிலும் தலைவி பேசலாம் (ஏமம் சான்ற உவகைக் கண்ணும்)

மேற்கூறியவாறெல்லாம் களவொழுக்கத்தின்போது கூற்று நிகழ்த்தும் தலைவி தலைவனிடம் தனக்குள்ள உரிமை தோன்றும் படிப்பேசுவாள் (தன்வயின் உரிமை). அதே நேரத்தில் தலைவனின் தன்னுடன் ஒட்டாத தன்மை (அவன்வயின் பரத்தமை) பற்றியே பெருமளவுக்குப் பேசுவாள்.

***தலைவி பேசும் பிற இடங்கள்[14]:***

திருமணத்திற்குப் பொருளீட்டுவதற்காகச் சென்ற தலைவன் விரைவாக வராததால் வருந்தும்போதும் (வரைவு இடைவைத்த காலத்து வருந்துதல்) திருமணம் செய்வதற்கு முற்பட்ட நாட்களில் தன்னைத் தேடி வந்த தலைவன் எதிர்பாராத விதமாகத் தன் உறவினர்களை நேருக்கு நேர் சந்திக்கும் நிலை ஏற்படும் போதும் (வரையா நாளிடைவந்தோன் முட்டுதல்) விரைவில் தன்னை மணமுடிக்க தலைவனிடம் சொல் எனத் தோழியிடம் கூறும்போதும் (உரையெனத் தோழிக்கு உரைத்தற்கண்) தலைவி தானாகவே சிந்தித்துக் கூற்று நிகழ்த்துமிடங்களும் உள.[15]

14 தொல்காப்பியம் *பொருளதிகாரம்*, நூற்பா 1058
15 தமிழண்ணல், *பொருளதிகாரம் I*, ப.149

'உயிரை விடவும் நாணம் சிறந்தது; நாணத்தைவிடக் குற்றமற்ற கற்பு சிறந்தது' என்றெல்லாம் நம் முன்னோர் சொல்லிச் சென்ற குற்றமற்ற சொற்களை மனதில் உள்வாங்கித் தன் தலைவனைத் தேடிச் செல்லும்போதும் மேற்குறிப்பிட்ட கற்பு, நாணம் தொடர்பானவைகளைப்பற்றி தலைவி நிகழ்த்தும் கூற்றுக்களும் உள.

இதுகாறும் கூறிய கூற்றுக்களுள் ஒன்றோ பலவோ அக இலக்கியங்களில் இடம் பெறும்.

## VI. களவொழுக்கத்தில் தோழியின் செயல்களும் கூற்று நிகழ்த்துமிடங்களும்

அகப்பொருள் இலக்கியங்களில் இடம்பெறும் முக்கிய கதை மாந்தர்களுள் தலையின் தோழிக்குச் சிறப்பானதொரு இடம் உண்டு. தலைவன் தலைவியின் களவொழுக்கத்தின் போது தோழி செய்யும் செயல்களும் கூற்று நிகழ்த்துமிடங்களும் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

### தோழியின் செயல்கள்:

தலைவியின் செவிலித்தாயின் மகளே தலைவியின் நெருக்கமான தோழியாக விளங்குவாள். தோழிதானே செவிலியது மகளே என்னும் தொல்காப்பிய நூற்பா இதனைத் தெரிவிக்கும். தோழி தன்னலம் மறந்து தலைவி நலம் பேணும் இயல்பினள். தலைவன் தலைவியிடையே களவொழுக்கம் தொடர்ந்து நடைபெறுவதற்கும் நீடிப்பதற்கும் தோழி பெருந்துணை புரிவாள். தலைவன் தலைவியரின் களவொழுக்கம் முதலில் தோழிக்குத் தெரியாமலேயே தொடங்கும். ஆனால் தோழியின் உதவி தேடித் தலைவன் வருவதை வைத்தும், தலைவியின் முகக் குறிப்பு கண்டும், தலைவியும் தோழியும் சேர்ந்திருக்கும்போது அங்கேதலைவன் வருவதை வைத்தும் தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி அறிந்து கொள்வாள். அக்களவொழுக்கத்திற்கு உதவி செய்ய உடன்படுவாள். இது மதியுடம்படுதல் எனப்படும். இதனை

*குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்*
*இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என*
*மதியுடம்படுதல் ஒரு மூவகைத்தே* (நூற்பா 1073)

என்னும் நூற்பாவால் அறிகிறோம்.

மதியுடம்படுதலுக்குப் பிறகு தலைவன் தலைவி ஆகிய இருவரையும் கூட்டுவிக்கும் பணியைத் தோழி மேற்கொள்வாள். தலைவன் தலைவி ஆகிய இருவரையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக அவள் விளங்குவாள்.

தோழியின் உதவியுடன் தலைவன் தலைவியைக் கூடுவது தோழியிற் கூட்டம் எனப்படும். சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியிற் கூட்டம் பற்றிய பாடல்கள் பெருமளவிற்கு உள்ளன. தோழியின்றிக் காதலர்களின் களவொழுக்கம் நிகழாது என்றும் ஐந்திணை இலக்கியப் படைப்புக்கு தோழி இன்றியமையாதவள் என்றும் தோழியிற் புணர்ச்சி என்பதே புலவர்களின் நெஞ்சங்களைக் கவர்ந்தன என்றும் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.[16]

### தோழி கூற்று நிகழ்த்துமிடங்கள்[17]

தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே தோன்றியுள்ள களவொழுக்கத்தைத் தோழி தலைவியிடம் காணப்படும் சில மாற்றங்களால் அறிந்து கொள்வாள். தலைவனைத் தழுவியதால் தலைவியின் உடலில் தோன்றும் சந்தனம், மலர்கள் ஆகியவற்றின் நறுமணத்தாலும், தலைவியின் புதிய தோற்றப் பொலிவினாலும், தலைவியின் வழக்கமான செயல்களில் ஏற்பட்ட மாற்றங்களாலும் தலைவி உண்ணும் உணவின் அளவு குறைவதாலும், மறைவான செயல்கள் சிலவற்றைத் தலைவி செய்வதாலும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கே மீண்டும் மீண்டும் அவள் செல்வதாலும், வழக்கம்போல் செவிலி அருகில் தலைவி தூங்காமல் விலகித் தூங்குவதாலும் ஆகிய ஏழு காரணங்களால் தோழி அறிந்து கொள்வாள். அறிந்தபின் பொய்யாகவும் மெய்யாகவும் நெறிமுறை தவறாது உட்பொருள்படும்படியாகப் தோழி பேசலாம் (நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும் செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும் புணர்ச்சி எதிர்ப்பாடுள்ளுறுத்து வருஉம் உணர்ச்சி ஏழினும் உணர்தல்)

தலைவியைக் கூடுவதற்கு உதவி செய்யவேண்டும் என்று வேண்டிவரும் தலைவனிடம், மறைவான இக்களவொழுக்கம் உன் பெருமைக்கு உகந்தது ஆகாது எனத் தோழி மறுத்துப் பேசலாம் (குறையுறற்கு எதிரிய கிழவனை மறையுறப் பெருமையிற் பெயர்த்தல்). மறைவான களவொழுக்கம் குறித்து உலகம் பலவிதமாகப் பேசும். ஏனெனில் உலகம் பொல்லாதது எனத் தோழி பேசலாம் (உலகு உரைத்து ஒழித்தல்)

'தலைவி நீ அடைவதற்கு அரியவள்' எனக் கூறித்தலைவனைத் தோழி விலக்கலாம் (அருமையின் அகற்சி)

தலைவன் வருகையையும் வேட்கையையும் தலைவிக்கு அறிவுறுத்திவிட்டு, தலைவனைப் 'பிறிதொரு சமயம்வா' எனத் தோழி கூறலாம் (அவள் அறிவுறுத்துப்பின் வா என்றல்)

---

16 டாக்டர் வ. சுப. மாணிக்கம், *தமிழ்க்காதல்*, பக்.55–56

17 தொல்காப்பியம் *பொருளதிகாரம்*, நூற்பா 1060 முற்பகுதி

Scanned by TapScanner

தலைவி அறியாதவயதினள் எனக்கூறித் தலைவனைத் தோழி தவிர்க்க முயலலாம் (பேதைமை ஊட்டல்)

தலைவன் தலைவி மீதுள்ள புணர்ச்சி வேட்கையைத் தோழியிடம் கூறும்போது முதலில் தலைவனுக்குத் தலைவியுடன் நடந்த புணர்ச்சியைக் குறிப்பிட்டு, அதுபோல 'இப்போதும் நீயே சென்று தலைவியைக்கூடு' எனத் தோழி கூறலாம் (முன்னுறு புணர்ச்சிமுறை நிறுத்துரைத்தல்)

தலைவனுடன் தலைவிக்குள்ள களவொழுக்கத்தை பெற்றோர் அறிந்து விடுவர் எனத்தான் அஞ்சுவதாகத் தோழி கூறலாம். தலைவனையும் அச்சுறுத்தலாம் (அஞ்சி அச்சுறுத்தல்)

தலைவன் கேட்டுக்கொண்டபடி தலைவியை அவன் கூடுவதற்குத் தோழி சிலசமயங்களில் உடன்பட்டுப் பேசலாம் (உரைத்துழிக் கூட்டம்)

**தலைவன் தலைவியைக் கூடிய பின் தோழி நிகழ்த்தும் கூற்றுக்கள்[18]**

முன்பு தலைவியைக் கூடவந்த தலைவனைப் பொய் பல சொல்லித் தடுத்தற்கான காரணத்தைத் தோழி தலைவியிடமோ தலைவனிடமோ கூறலாம். (வந்த கிழவனை மாயம் செப்பிப் பொறுத்தகாரணம் குறித்தல்)

இப்போது தோழி தலைவனை வணங்கிப் பணிவுடன் பேசலாம் (புணர்ந்தபின் அவன்வயின் வணங்கல்)

தலைவனும் தோழியிடம் பணிந்து நிற்கலாம். அப்போதும் தோழி பேசலாம் (குறைந்து அவள் படர்தல்)

தலைவியை அடிக்கடி சந்திக்க முடியாமல் அவள் மறைவாக இருக்க நேரிடும் சூழல்கள் தோன்றலாம். அப்போது தனக்கும் தலைவிக்கும் முன்பு நிகழ்ந்த புணர்ச்சியைக் கூறி அவளுடன் மீண்டும் கூடுவதற்கு உதவி செய்யுமாறு தோழியைத் தலைவன் வேண்டலாம். அப்போது தோழி பேசலாம். (மறைந்தவள் அருகத் தன்னொடும் அவளொடும் முன்னம் முன் தளை இப்பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கு)

தோழி தலைவியின் இசைவைப் பெற்றுத் தலைவியுடன் அவனைக் கூடுவதற்கு அனுமதிப்பதாகிய நன்மையைச் செய்யலாம். அப்போது அவள் பேசலாம் (நன்னயம் பெற்றுழி நயம்புரி இடம்)

தலைவியிடமோ தலைவனிடமோ பலவகையாகச் சிரித்து மகிழும் போதும் தோழி பேசலாம் (எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்)

தலைவன் தலைவியுடன் மீண்டும் புணர்ச்சி வேண்டினும் தோழி பேசலாம் (புணர்ச்சி வேண்டினும்)

18 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1060 (பிற்பகுதி)

தலைவன் தலைவி ஆகிய இருவரும் விரும்பாத பிரிவு நிகழும்போதும் தோழி பேசலாம் (வேண்டாப் பிரிவினும்)

பெருநெறியாகிய இல்லறநெறியில் தலைவியுடன் ஈடுபடுமாறு தலைவனைத் தோழி வேண்டும் போதும் கூற்று நிகழ்த்தலாம் (வேளாண் பெருநெறி வேண்டிய இடம்)

தலைவனோடு புணர்ச்சி நிகழ்ந்தபின் தலைவி மடம் எனப்படும் அறிந்தும் அறியாத நிலையில் இருக்கலாம். அப்போதும் தோழி பேசலாம் (புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்)

தலைவன் 'தலைவியைப் பாதுகாக்கவேண்டும்' என்று வேண்டும் போதும் தோழி பேசலாம் (ஓம்படைக் கிளவிப் பாங்கின்கண்)

தலைவனைப் பிரிந்து எலும்பும் உருகும்படியான பிரிவுத் துன்பத்தில் இருக்கும் தலைவியிடம் சென்று செம்மையான கடிய சொற்களால் அறிவுரை கூறலாம். எனினும் அத்துன்பத்தைத் தாங்கும்படி அன்புடன் வற்புறுத்தவும் செய்யலாம். அப்போதும் தோழி பேசலாம் (செங்கடுமொழியால் சிதைவுடைத்தாயினும் என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ அன்பு தலையெடுத்த வன்புறைக்கண்ணும்)

தலைவன் தலைவியைச் சந்திக்கவரும் வழியில் அவனுக்கு நேரிடலாம் என அஞ்சும் ஆபத்தைத் தலைவியிடம் எடுத்துரைத்துத் தோழி கலங்கும் போதும் தோழி பேசலாம் (ஆற்றது தீமை அறிவுறு கலக்கம்)

தலைவியின் பெற்றோர் தலைவியை இற்செறிக்கும் (வீட்டில் அடைத்து வைக்கும்) கடுமையான செயலால் தோழி கையற்ற நிலையில் வருந்திப் பேசலாம் (காப்பின் கடுமை கையறவரினும்)

தலைவியைச் சந்திப்பதற்குத் தலைவன் இடமும் நேரமும் குறித்திருக்கலாம். தலைவியின் பெற்றோர் தலைவிக்கு ஏற்படுத்தியிருக்கும் காவலால் தலைவனைச் சந்திப்பதைத் தலைவி தவிர்க்கலாம். அப்போது தலைவியிடம் காதல் உணர்வு மிகலாம். தோழியிடம் அவள் அதை எடுத்து ரைக்கலாம். அப்போது தோழி பேசலாம். (களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக் காதல் மிகுதி)

தலைவியினது நாடு, ஊர், வீடு, குடி, பிறப்பு, சிறப்பு ஆகியன பற்றித் தலைவனிடம் விரிவாகக் கூறித் தலைவியைத் திருமணம் செய்யுமாறு தலைவனைத் தோழி தூண்டும் போதும் தோழி பேசலாம் (நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்)

தலைவியின் தாய் தலைவியின் களவொழுக்கம் குறித்து ஐயம் கொள்ளலாம். தோழி அதனை மறுத்து அந்த ஐயம் பொய்யெனச் சொல்லி உண்மையாய் நடந்தவற்றை எடுத்துரைப்பதற்காகவும் தோழிகூற்று

நிகழ்த்தலாம் (ஐயச் செய்கை தாய்க்கு எதிர்மறுத்துப் பொய்யென மாற்றி மெய்வழி கொடுப்பினும்)

தலைவியின் களவொழுக்கத்தைத் தாய்தடுக்கலாம் அவள் விலங்குறினும்): தலைவியின் உடல் மெலிவு போக்க வெறியாடல் களத்துக்கு அழைத்துச் செல்ல முற்படலாம் (களம் பெறக் காட்டினும்) தலைவன் அல்லாத பிறர் தலைவியை மணம் பேச வரலாம் (பிறன் வரைவு ஆயினும்) தலைவனுக்குத் தலைவியை மணம் செய்துகொடுக்க அவள் பெற்றோர் மறுக்கலாம். (அவன் வரைவு மறுப்பினும்) இத்தகு சூழல்களில் நேடியாகப் பேசுதல் (முன்னிலை), தலைவியின் காதல் ஒழுக்கத்தை வெளிப்படுத்திப் பேசுதல் (அறத்தொடு நிலை) என்னும் இரு நிலைகளில் உண்மையும் பொய்மையும் கலந்த குற்றமற்ற தன் திறமையான பேச்சால் தலைவியின் தாயை உடன்படச் செய்யும் வகையில் தோழி பேசலாம் (இருவகைப் புரைதீர் கிளவி தாயிடைப்பகுப்பினும்)

இதுவரை தோழியின் செயல்களும் கூற்றுக்களும் குறித்து அறிந்து கொண்டோம்.

## VII. களவொழுக்கத்தில் செவிலி கூற்று நிகழ்த்துமிடங்கள்[19]

தலைவியை வளர்க்கும் செவிலித்தாய் அகப்பொருள் இலக்கியங்களில் வரும் முக்கிய கதை மாந்தர்களுள் ஒருவள் ஆவாள். இவள் தலைவியின் களவொழுக்கத்தில் பின்வருமாறு கூற்று நிகழ்த்தலாம்.

1. தலைவன் தலைவியின் களவொழுக்கம் வெளிப்பட்டு ஊரார் அதை அறிந்து அலர்தூற்றும் (பழிதூற்றும்) நிலையில் செவிலி, தலைவியின் தோழியிடம் பேசலாம் (களவு அலர் ஆதல்)

(எ-டு) குறுந்தொகை 89ஆவது பாடலில் வரும் செவிலித்தாய் 'நல்லியல்புடைய பாவை போன்ற, மெல்லியல்புடைய சிறு பெண்ணாகிய தலைவியை ஊரார் பழிதூற்றுகின்றார்களே' என்னும் பொருள்பட வருந்திக் கூறுவது.

2 தலைவி உடலில் காம உணர்வு வெளிப்பட்டுத் தோன்றுவதைக் கவனிக்கும் போதும் செவிலித்தாய் பேசுவாள் (காமம் மெய்ப்படுப்பினும்)

3. சிறுபெண்ணாகிய தலைவி தலைவனுடன் நிகழ்ந்த புணர்ச்சி காரணமாக பெருத்த மார்பகங்களையும் புதிய பொலிவையும் பெற்று விளங்கும் போதும் செவிலி கூற்று நிகழ்த்துவாள் (அளவு மிகத்தோன்றினும்)

(எ-டு) திருக்குறள் காமத்துப்பாலில் 1272 ஆவது குறளில் வரும் செவிலி 'பேதைக்குப் பெண் நிறைந்த நீர்மை பெரிது' என்று கூறுவது.

---

19 தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா 1061

4. தலைவியையும் தலைவனையும் ஒரு சேர ஓரிடத்தில் காணும் போதும் செவிலி பேசுவாள் (தலைப்பெய்து காணினும்)

5. குறிசோதிடம் கூறும் கட்டுவிச்சி தலைவியின் களவொழுக்கம் குறித்துக் குறிசொல்லும் போதும் செவிலி தலைவியின் தோழியிடம் பேசுவாள் (கட்டினும்)

6. கோடாங்கி எனும் குறிசொல்வோள் கழற்சிக்காயை உருட்டிக்குறிகூறும் போதும் செவிலி கூற்று நிகழ்த்துவாள் (கழங்கினும்)

7. கட்டுவச்சியும் கோடாங்கியும் ஆகிய இருவரும் தலைவிக்கு வெறியாட்டு நிகழ்த்த வேண்டும் என்று கூறும்போதும் செவிலி பேசுவாள் (வெறி என இருவரும் ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்)

8. வெறியாடல் நிகழும்போது தலைவி வருந்தலாம். அப்போதும் செவிலிபேசலாம் (ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்)

9. மிகுதியான காதல் உணர்வால் கனவில் தலைவனை நினைத்துத் தலைவி அரற்றுவதைக் கேட்க நேரிடும்போது செவிலி கூற்று நிகழ்த்தலாம் (காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்)

10. மேற்கூறியவாறு தலைவி கனவில் புலம்பியதற்கான காரணத்தைச் செவிலி தோழியிடம் கேட்கலாம் (தோழியை வினாவலும்)

11. தெய்வம் தலைவியைக் காக்க வேண்டும் என்று வாழ்த்தும்போதும் செவிலி பேசலாம் (தெய்வம் வாழ்த்தலும்)

12. தலைவி தலைவனுடன் உடன் போக்கு மேற்கொண்டதை அறிந்த பின் தோழியுடன் சேர்ந்து தலைவனுக்கே தலைவியை மணமுடிக்க வேண்டும் என்று கற்புக்கு (திருமணத்திற்கு) ஆதரவாக நிற்கும் நிலையிலும் செவிலி கூற்று நிகழ்த்தலாம் (போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக் கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்)

13. தலைவியின் உடன்போக்காகிய பிரிவுக்குப்பின் வருந்தும் போதும் செவிலி பேசலாம் (பிரிவின் எச்சத்தும்)

14. தலைவியாகிய மகள் மனம் வருந்தும்போதும் செவிலி பேசலாம் (மகள் நெஞ்சு வலிப்பினும்)

15. தலைவனது குடிப்பெருமையைத் தலைவியின் குடிப்பெருமையோடு ஒப்பிட்டு ஆராயும் போதும் செவிலி கூற்று நிகழ்த்தலாம் (இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்)

மேற்கூறியவை செவிலித்தாய் கூற்று நிகழ்த்தும் இடங்களாகும்.

செவிலியின் உணர்வுபோன்ற உணர்வுடையவளாக நற்றாய் இருந்தால் மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் நற்றாய்க்கும் உரியன.

தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே (நூற்பா 1062)

என்னும் நூற்பாவால் இதை அறியலாம்

## VIII. களவொழுக்கம் குறித்த பிற செய்திகள்

**தலைவன் பற்றிக் கேட்டறிதல்:**

தலைவனை நன்கு அறிந்து காதல் கொள்ளும் அறிவு முதிர்ச்சி இலலாதவள் தலைவி என்பதால் நற்றாயும் செவிலித்தாயும் தலைவன் குறித்த ஐயங்களைப் பெரியவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வர். (நூற்பா 1063)

**குறிப்பாக வெளிப்படும் தலைவியின் வேட்கை:**

காதல் ஒழுக்கமாம் அன்பின் ஐந்திணையில் தலைவியின் காதல்வேட்கை வெளிப்படத் தோன்றாது. ஏனெனில் நாணம், மடம் என்னும் பெண்மைப் பண்புகளை உடையவள் அவள். எனவே தலைவியின் காதல் உணர்வு குறிப்பாகவும் சூழ்நிலைகளாலும் மட்டுமே உணரப்படும்.

*காமத் திணையில் கண்ணின்று வருஉம்*
*நாணும் மடனும் பெண்மைய ஆதலின்*
*குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை*
*நெறிப்பட வாரா அவள் வயினான* (நூற்பா 1054)

தனது வேட்கையைத் தலைவன் முன் சொல்லும் இயல்பு தலைவிக்கு இல்லை. எனினும் அடக்கி வைக்கப்படும் அவளது வேட்கை புதுமன் பானையுள் பெய்து வைத்துள்ள நீர் வெளியே கசிவதுபோல குறிப்பாக வெளிப்படும்.

*தன்னுறு வேட்கை கிழவன் முன்கிளத்தல்*
*எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை*
*பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்*
*பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப* (நூற்ப 1064)

**பகற்குறியும் இரவுக்குறியும்:**

களவொழுக்கத்தில் ஈடுபடும் தலைவனும் தலைவியும் இரவிலும் பகலிலும் இன்ன இடத்தில் சந்திக்கவேண்டும் என்று குறித்துக்கொண்டு (முடிவு செய்துகொண்டு) கூடுமிடம் குறியிடம் எனப்படும். இரவில் சந்திக்குமிடம் இரவுக்குறி என்றும் பகலில் சந்திக்குமிடம் பகற்குறி எனப்படும்.

இரவுக்குறி என்பது தலைவியின் வீட்டின் புறத்தே, வீட்டிலுள்ளோர் பேசுவன கேட்கும் தூரத்தில் அமையும். அந்த இடத்தில், யாரும் வராத நேரத்தில் தலைவன் தலைவி சந்திப்பு நடைபெறும்.

*இரவுக் குறியே இல்லகத் துள்ளும்*
*மனையோர் கிளவி கேட்கும் வழிஅதுவே*
*மனையகம் புகாஅக் காலை யான* (நூற்பா 1077)

பகலில் தலைவனும் தலைவியும் தலைவியின் வீட்டுக்கு வெளியே உள்ள ஓர் இடத்தில் சந்திப்பர். அந்த இடம் தலைவி வழியறிந்து வருமிடமாக இருக்கும்.[20]

*பகற்புணர் களனே புறன் என மொழிப*
*அவள் அறிவுரை வருவழியான* (நூற்பா 1078)

தலைவி தலைவனின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பவள்; அதற்கு மாறாக நடப்பது தனக்கு அறமாகாது என நினைப்பவள். தலைவன் ஒரு குறியிடம் சொல்ல, அது தலைவி செல்ல முடியாத இடமாக இருந்தால் தலைவன் சொல்லை அவள் மீறுவதாகும். எனவே குறியிடம் பற்றிக் கூறும் சொற்கள் அவளுடையதே ஆகும். அவ்வாறு சொல்லும்போது அவளுக்கேற்ற இடத்தை அவளே அறிந்து கூறுவாள். தோழியின் உதவியுடன் தலைவி குறியிடம் கூறுவதும் உண்டு. (நூற்பாக்கள் 1066, 67)

**அல்லகுறிப்படுதல்:** தலைவன் தலைவியை குறிப்பிட்ட ஓரிடத்தில் சந்திக்க வேண்டும் எனக்கூறியிருப்பான். வேறோர் இடத்தை அவன்கூறிய இடமாகக் கருதித் தலைவி மயங்கும்போது தலைவனைச் சந்திக்க தலைவன் கூறாத அந்த இடத்திற்கு தலைவி செல்வதும் உண்டு. இது அல்ல குறிப்பிடுதல் எனப்படும்

*அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே*
*அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே* (நூற்பா 1079)

முடிவு செய்துகொண்டு ஓர் இடத்தில் சந்திக்காமல், பொருத்தமான ஒரு மறைவிடம் கிடைத்தால் தலைவனும் தலைவியும் அங்கு எதிர்பாராதவிதமாகச் சந்தித்துக் கொள்வதும் உண்டு.

**தலைவியைச் சந்திக்கத் தவறாமை:**

*ஆங்காங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டே*
*ஓங்கிய சிறப்பின் ஒரு சிறையான* (நூற்பா 1080)

மகளிர் விளையாடும் ஓரை என்னும் வண்டல் விளையாட்டின்போதும், விழாக் காலங்களின்போதும் தலைவன் தலைவியை எளிதாகச் சந்திக்கலாம். எனவே மறைவான களவொழுக்கம் மேற்கொள்ளும் காலங்களில் இந்நாட்களைத் தலைவன் துறந்து புறக்கணிப்பது இல்லை.

---

20 தற்காலத்தில் பகல்நேரத்தில் காதலர்கள் சந்திக்கும் பகற்குறியாக திரையரங்கம், பேருந்து, ரயில் நிலையங்கள், பூங்கா, கடற்கரை முதலியன அமைகின்றன. எனவே இக்காலக் காதலர்களுக்கு உரியவை திரையரங்கக் களியாடல், பேருந்து ரயில் நிலைய நடமாடல், பூங்கா, கடற்கரை உரையாடல் முதலியன ஆகும்.

*மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்*
*துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை* (நூற்பா 1081)

களவொழுக்கக் காலங்களில் தலைவன் தலைவியைச் சந்திக்க வரும் வழியினது அருமையை நினைத்தோ, ஆபத்து நேரும் என அஞ்சியோ, இடையூறுகள் குறித்துக் கவலைப்பட்டோ தலைவன் தலைவியைச் சந்திக்க வராமலிருப்பது இல்லை.

*ஆற்றினது அருமையும் அழிவும் அச்சமும்*
*ஊறும் உளப்பட அதனோரன்ன* (நூற்பா 1082)

**அம்பலும் அலரும்**: அம்பல் என்பது பூவின் மொட்டுநிலை; தொடக்க நிலை. அலர் என்பது மலர்ச்சிநிலை; வளர்ச்சிநிலை. அவ்வாறே மறைவாக நிகழ்ந்த தலைவன் தலைவயின் களவொழுக்கம் ஒரு சிலருக்கு மட்டும் தெரிந்து அதுகுறித்து அவர்கள் தமக்குள் பேசிக் கொள்ளுதல் அம்பல் எனப்படும். களவொழுக்கம் பலருக்கும் தெரிந்து பலரும் அதுபற்றிப் பேசுதல் அலர் எனப்படும். தலைவன் தலைவியை அடிக்கடிச் சந்திக்க வருவதனாலேயே முதலில் அம்பல் தோன்றிப் பிறகு அலராக அது வளர்ச்சி பெறும்.

*அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்*
*அங்கு அதன் முதல்வன் கிழவனாகும்* (நூற்பா 1085)

**தாமே சந்தித்தல்**: களவொழுக்க காலத்தில் தலைவனும் தலைவியும் கூடுவது தனிமையிலேயே இனிமைபெறும். எனவே அவர்கள் தூதுவர் எவர் துணையுமின்றித் தாமே சந்தித்துக் கூடுவதும் உண்டு.

*காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்*
*தாமே தூதுவர் ஆதலும் உரித்தே* (நூற்பா 1065)

தலைவனும் தலைவியும் தாமே சந்திப்பது மூன்று நாட்கள் மட்டுமே. இந்த மூன்று நாட்களுக்குள் தோழி ஏதேனும் நாளில் துணையாக வந்தாலும் அது புறக்கணிக்கப்படுவது இல்லை.

*முந்நாள் அல்லது துணையின்று கழியாது*
*அந்நா ளகத்தும் அதுவரை வின்றே* (நூற்பா 1068)

**தோழியைத் தேர்வு செய்து கூறுதல்**: பல நூறு வகையிலும் தனக்கு வரவேண்டிய நன்மைகளை அறிந்து உதவுதல் நல்ல துணையாளரின் கடமை. எனவே அத்தகைய துணையாகிய தோழியாரென அறிந்து கூறும் உரிமை தலைவியினுடையதாகும்.

*பன்னூறு வகையினும் தன்வயின் வருஉம்*
*நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்*
*துணைச் சுட்டுக் கிளவி கிழவிய தாகும்*
*துணையோர் கருமம் ஆகலான* (நூற்பா 1069)

**தந்தையும் தமையனும் அறிதல்:** தலைவியின் தந்தையும் தமையனும் தலைவியின் களவொழுக்கம் குறித்துக் குறிப்பினால் அறிவர்.

*தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப* (நூற்பா 1083)

**தாய் அறிதல்:** தலைவியின் களவொழுக்கம் குறித்துச் செவிலித் தாய் அறிந்து கொள்ளும்போது தாயும் அறிந்து கொள்வாள்.

*தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்* (நூற்பா 1084)

**வரைவின் வகைகள்:** தலைவன் தலைவியரின் களவொழுக்கம் வெளிப்பட்ட பின்பு அவர்கள் பெற்றோரின் இசைவுடன் திருமணம் நடப்பதுண்டு. களவு வெளிப்படு முன்பே திருமணம் நடைபெறுவதும் உண்டு. எனவே திருமணத்தின் (வரைவின்) வகைகள் இவ்வாறு இரண்டாகும்.

*வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று*
*ஆயிரண்டென்ப வரைதல் ஆறே* (நூற்பா 1086)

**கற்புக்குப் பின்பே பிரிவு:** களவொழுக்கம் வெளிப்பட்டு தலைவனும் தலைவியும் பலரறிய வெளிப்படையாகத் திருமணம் செய்து கொள்வதே கற்பாகும். இத்தகைய கற்பொழுக்கத்துக்குமுன் அதாவது களவொழுக்க காலத்தின்போது முன்பு கூறப்பட்ட ஓதல், பகை, தூது காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிவது இல்லை. கற்பொழுக்க காலத்திலேயே அப்பிரிவுகள் நடைபெறும். திருமணத்திற்கு என்று பொருளீட்டு வதற்காகச் செல்லும் சிறுபிரிவாகிய பொருள்வயிற் பிரிவு மட்டுமே களவொழுக்க காலத்தில் நிகழும்.

*வெளிப்படை தானே கற்பினோடு ஒப்பினும்*
*ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக*
*வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை* (நூற்பா 1087)

*